www.tamilarangam.net

# புதிய சமுதாயம் 1

## NEW SOCIETY

மனித வரலாறு என்றும் முன்னோக்கியே செல்கிறது. மானிடத்தின் தாகம் என்றும் உண்மைகளும் நியாயங்களுமே. அதனாலேயே மனிதன் வரலாற்று ஓட்டத்திற்கு ஓர் உந்து சக்தியாக விளங்குகிறான்.

வரலாற்றில் உண்மைகளும், நியாயங்களும் என்றும் நிரந்தரமாக மறைக்கப்பட்டு விடுவதில்லை. பொய்மைகளின் தடைச்சுவர்களைத் தகர்த்தெறிந்து அவை ஓர் நாள் துலாம்பரமாக வெளிவந்தே தீரும்.

ஆடி 1989

7/50

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எமது போராட்டம்

## ஓர் வரலாற்றுப் பார்வை

எமது தேசத்தின் தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டமானது ஆயுதமேந்திய போராட்டமாக மாற்றமடைந்த காலகட்டத்தில் இருந்து இன்று வரை பல பாரிய மாற்றங்களைக் கண்டுள்ளது.

இன்று அது ஒரு மிகவும் சிக்கலான நிலையை அடைந்துள்ளது. அதுமட்டுமன்றி மக்களையும் போராட்ட சக்திகளையும் பாரிய குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. இப் போராட்டத்தின் அடுத்த கட்டம் எப்படி இருக்குமோ என்ற தெளிவில்லாத நிலைக்கு தமிழ் மக்களைத் தள்ளிவிட்டும் உள்ளது.

ஆனாலும், ஒரு சமூக மாற்றத்தை நோக்கிய பாதையில் எமது போராட்டத்தை நடத்திச் செல்ல விரும்புகின்றோமாயின், நாம் கடந்த கால எமது போராட்டத்தின் அனைத்து அநுபவங்களையும் ஆழமாக மீளாய்வு செய்து பல விடயங்களில் தெளிவடைவதன் மூலம் மட்டும்தான் அடுத்த கட்டமாக எமது வேலையின் திசை மார்க்கம் பற்றித் தெளிவடைய முடியும்.

எமது கடந்தகால போராட்ட வரலாற்றின் அநுபவங்களை மீளாய்வு செய்யும்போது போராட்டத்தின் பல அம்சங்களையும் தனித்தனியாகவரையறுத்து ஆய்வு செய்தல் மிகவும் அவசியம்.

எமது தேசத்தின் விடுதலைப் போராட்டம் இன்றைய நிலைக்கு சீரழிந்து போனமையை வெளிப்படுத்தும் காரணங்களாகக் கீழ்க்கண்டவற்றை நாம் முன்வைக்கலாம்?

1. தமிழ் பேசும் மக்கள்மீது இன ஒடுக்குமுறை அதிகரித்த கட்டத்தில் இருந்து எமது போராட்டமானது ஒரு சீரான படிமுறை வளர்ச்சிக்கூடாக முன்னேறாது செயற்கையான பல பாய்ச்சற் கட்டங்களுக்கூடாக வளர்ந்தமை.
2. தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக போராடுவதாகக் கூறிக்கொண்டே இயக்கங்கள் அனைத்துமே இந்தியா மீது அதிக நம்பிக்கையும் பிடிப்பும் கொண்டிருந்தமை.
3. போராட்டமானது மிக நெருக்கடியான கட்டத்தை இடைந்தபோதும் கூட, போராட்ட குழுக்கள் தமிழ்பேசும் மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டும், பொது எதிரியை நோக்கி யுத்தம் செய்வதை நோக்கமாகக் கொண்டும் ஓர் உறுதியான ஐக்கிய முன்னணிக்குள் ஒன்றிணையாது தமக்குள்ளேயே முரண்பட்டுப் பிளவுபட்டுப்போனமை.
4. ஆனாலும், அமைக்கப்பெற்ற ஐக்கிய முன்னணி அமைப்புக்கூட ( E.N.L.F. ) இந்திய அரசின் ஆலோசனையின் பேரில் அமைக்கப்பட்டமை.
5. போராட்டத்தின் ஈடுபட்ட அமைப்புகள் எவையுமே இப்போராட்டத்தை ஒரு நீண்டகால போராட்டமாக கருதாமல் மிக குறுகிய காலத்திலேயே அடைந்து விடக்கூடிய இலட்சியமாக கருதி, நீண்ட காலக் கண்ணோட்டத்தில் சுய சார்பில் தங்கிநின்று போராட்டத்தை முன்னெடுக்க எதுவித திட்டமும் இல்லாது இருந்தமை.

......



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



6. எமது தேசத்தின் இடதுசாரிச் சக்திகள், அல்லது இடது சமரிக் கண்ணோட்டத்தில் எமது போராட்டத்தைப் பார்க்க முனைந்த சக்திகள், தமது தத்துவ வறுமை யிலும் அதிதீவிர போக்குகளினாலும் யதார்த்தத்திற்கும், அன்றைய காலகட்டத் திற்கும் ஒவ்வாத வேலை முறைகளை வகுத்துச் செயற்பட்டதன் மூலம் மக்களிடம் இருந்து அந்நியப்பட்டமை, பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். என்று கூறிக்கொண்டே அடிப்படையில் அவ்வர்க்கத்தை இப்போராட்டத்திலிருந்து அந்நியமாக்கும் வேலையைச் செய்ததன் மூலம், அவ்வர்க்கத்தை தவறான சக்திகளின் பின்னால் போக வழி வகுத்தமை.

7. விடுதலைப் புலிகள் அமைப்பு தனது குறுகிய தேசியவாத நிலைப்பாட்டில் இருந்துகொண்டு தம்மைத்தவிர தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு எவருக்கும் உரிமையில்லை என்ற பாணியில் ஏனைய அமைப்புக்கள் மீது தடை விதித்தமை.

8. மேற்சொன்ன சூழ்நிலைகளின் காரணமாக பலவீனமாக எமது போராட்டம் இருந்த நிலையை, இந்திய அரசுகள் மிகத் திறமையாகத் தமக்குச் சாதகமாக பயன்படுத்தியமை.

9. விடுதலைப் புலிகளினால் தாக்கப்பட்ட, தடைவிதிக்கப்பட்ட அமைப்புகள் எவையுமே தமது சொந்தக் காலில் நின்று போரிடாமையும் பின்தளத்திற்கு ஓடியமையும் இந்தியாவின் காலடியில் தஞ்சம்புகுந்திருந்தமையும்.

10. இலங்கை அரசாங்கம் செய்த கண்மூடித்தனமான தாக்குதல்கள் விடுதலை இயக்கங்கள் விட்ட தவறுகள் அனைத்தையும் காரணமாக வைத்து இந்தியா தனது நீண்டகாலக் கனவை மிகக் கச்சிதமாக, தானே தமிழ் பேசும் மக்களின் இரட்சகன் என்ற போர்வையுடன் தனது நேரடி ஆதிக்க நடவடிக்கையை இங்கு செய்து கொண்டமை.

மேற்கூறிய காரணங்களை போராட்டத்தில் வெளிப்பட்ட தன்மைகளாகக் காணுகின்றபோதும் இத்தன்மைகளின் வெளிப்பாட்டுக்கு அடிப்படையாக எவற்றைக் கொள்ளலாம்? எமது போராட்டத்தின் கருத்தமைவு அல்லது அது ஆளுமைக்குட் பட்டிருந்தது. "தமிழ் குறுகிய தேசியவாதத்திலேயே" அவ்வாறு அவ்வாளுமைக்குள் செல்ல எவை காரணமாக அமைந்தன? எமக்கு ஆழமான பொருளாதார அடித்தள மின்மையும், குட்டி முதலாளித்துவ சமூக அடிப்படையும் அதற்குப் பின்னணியான காலனித்துவ வரலாறுகளையும் நாம் இனங்கண்டுகொள்ள வேண்டும். குறுகிய இனவாத அரசியலிலும் அதேவேளை ஓர் குறிப்பிட்ட, மிகவும் பலமில்லாத, தென் பகுதியில் தங்கியிருந்த ஓர் வர்க்கத்தின் ஆளுகைக்குள்ளும் இருந்த (த.வி.கூ) தமிழ் மக்கள் (வட,கிழக்கு) அத்தலைமையின் பாராளுமன்ற மாயையின் வரையறை யும் யதார்த்தத்தில் வளர்ந்த சிங்கள பேரினவாத அரசின் ஒடுக்குமுறையை எதிர்க்கும் திசையில் ஸ்தூலமாக மக்களை அணிதிரட்டாத நிலையிலும் அதன் வங்கு- ரோத்து தனத்தின் விளைவாகவே ஆயுதப் போராட்டம் வளர்ந்தது.

இப்போராட்டத்தைப் பல குழுக்கள் முன்னெடுக்க முனைந்தன. அவற்றின் தத்துவார்த்த அடிப்படையில் பல முற்போக்கான அம்சங்கள் இருந்தபோதும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராட்டத்தை முன்னுக்கு இழுத்துச் சென்றது குறுகிய தேசியவாத கருத்தமைவே. அதிலும் அக்குறுகிய தேசியவாத அடிப்படையை மிக உறுதியாகக் கொண்டிருந்த அமைப்புக்கள் மக்கள் மத்தியில் பிரபல்யமும் செல்வாக்கும் பெற்றன. இக்குறுந் தேசியவாதம் மிகத் தீவிரமாக வளர்ச்சி அடைவதற்கு ஸ்ரீலங்கா அரசின் பெருந் தேசிய இனவாதமே காரணமாக அமைந்தது. இவ்விரண்டுமே ஒன்றுக்கொன்று துணைபோய் முற்போக்கு அம்சங்களைப் பாதித்து பிற்போக்குத் தளத்தை நோக்கித் தள்ளிச் சென்றது.

எனவே படிமுறையாக மேலோட்டமாக அரசியற் போராட்டத்தைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டம் வளர்ந்தது போல் தோன்றினாலும் உண்மையில் நடந்தது பாராளுமன்ற அரசியற் போராட்டத்தின் வங்குரோத்துத் தளத்தைத் தொடர்ந்து "முழு அரசியலுமே" பயனற்ற வடிவமாக நிராகரித்த ஆயுதப் போராட்டமே தொடங்கியது. ஆனால் அரசியல் கருத்தோட்டத்தின் உள்ளாக்கத்தில் மாற்றம் ஏற்படவுமில்லை.

## எமது போராட்டமும் பாய்ச்சற் கட்டமும்

ஈழவிடுதலைப் போராட்டமானது 1983ஆம் ஆண்டு காலகட்டத்தில் இனக் கலவரத்துடன் ஒரு பாய்ச்சற் கட்டத்தைப் பெற்றது. இவ் இனக்கலவரமானது மிகக் கொடூரமான முறையில் நடைபெறுவதற்கு பேரினவாத அரசின் திட்டமிட்ட செயற் பாடே காரணமாக அமைந்தன. ஆனால் எமது போராட்டக் குழுக்களின் செயற் பாடுகள் அரசிற்கு தூண்டுகோலாக அமைந்தன..

பாய்ச்சற் கட்டம் என நாம் இங்கு கருதுவது ஒரு விடுதலைப் போராட்ட மானது ஒரு தத்துவார்த்த அடிப்படையில் படிமுறையாக வளர்ச்சியடையாது சம்பவங் களைத் தொடர்ந்து உணர்ச்சிகளின் அடிப்படையில் செயற்கையாக வீங்கிப் பருத்த தேயாகும். 1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்து பெருந்தொகையான இளைஞர்கள் இந்தியாவுக்கு ஆயுதப் பயிற்சிக்காகச் சென்றனர். பல்வேறு பெயர்களிலும் பல இயக்கங்கள் உருவாகின. இந்தியாசென்ற இளைஞர்களை இந்திய அரசு தனது கட்டுப் பாட்டிற்குள் வைத்து பல குழுக்களாகப் பிரித்து பயிற்சி அளித்தது. இது ஒரு விபத்து நிகழ்ச்சி அல்ல. பல ஆண்டுகளாக இலங்கையை தனது ஆதிக்கப் பிடிக்குள் கொண்டு வருவதற்குத் திட்டமிட்டு இருந்த இந்திய அரசிற்கு இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது என்பதனை மறுப்பதற்கில்லை.

இந்நிலையானது எமது போராட்டத்தைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக பலவீனமாக்கவே உதவியது. அதாவது, இலங்கை அரசிற்கெதிரான போராட்டங் க.. வெகுஜனப் போராட்டங்களிற்கூடான மக்களின் பங்களிப்பு என்பதை இரண்டாம் பட்சம் ஆக்கி இந்தியாவின் உதவியுடன் இளைஞர்கள் மட்டுமே போராட்டத்தை நடத்தி விடுதலை அடைந்துவிடலாம் என்ற மாயையை உருவாக்கியது.

இவ்வாறாக வளர்ச்சியுற்ற இவ்வியக்கங்கள் பெரும் எண்ணிக்கையைக் கொண்ட இளைஞர்களையும் இந்தியாவின் ஆதரவில் பெற்ற ஆயுதங்களையும் கொண்டு இங்கு மக்கள் தயார் அற்ற நிலையில் மிகப் பாரிய தாக்குதல்களை மேற்கொண்டதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூலம் ஒரு உள்நாட்டு யுத்த சூழலை உருவாக்கியதுடன், வடகிழக்கு பிரதேசம் முழுவதையும் ஸ்ரீலங்கா அரசின் இராணுவ மயமாக்கப்பட்ட பிரதேசமாக மாற்றி விட்டன.

இவ்வாறான நிலைமையை உருவாக்குவதற்கு இந்தியா மீதான நம்பிக்கையே காரணமாக அமைந்ததேயல்லாமல் மக்கள் மீது வைத்திருந்த நம்பிக்கை அல்ல. இந்தியா மீதான நம்பிக்கை வளர்வதற்கு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் உண்டு. இதைப் பிறிதொரு இடத்தில் ஆராய்வோம்.

இந்தியாவை நம்பிய அனைத்து இயக்கங்களும் இந்திய அரசைப் பற்றியோ, அதன் மோசமான பிராந்திய நலன் பற்றியோ, இலங்கை அரசையும் எமது போராட்டத்தையும் எவ்வாறு கையாள முற்படுகின்றது என்பது பற்றியோ தனது உள்நாட்டில் தேசிய இன போராட்டங்களை எவ்வாறு அடக்கி ஒடுக்குகின்றது என்பது பற்றியோ புரிந்து கொள்ளவுமில்லை, அல்லது புரிந்து கொள்வதற்கான அக்கறையும் இவ் இயக்கங்கள் எடுக்கவில்லை.

இவ் இயக்கங்களின் இவ்வாறான நிலைப்பாடுகளும் கூடஇந்திய அரசு மிகச் சுலபமாக இங்கு நுழைவதற்கு பாரிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது.

## போராட்டத்தில் நெருக்கடியும் இயக்கங்களின் ஐக்கியமின்மையும்.

எமது போராட்டம் இந்நிலைமைக்கு சீரழிந்து போனதற்கு, போராட்டத்தில் மிக நெருக்கடியான கட்டங்களில் இயக்கங்களுக்கிடையில்லை ஐக்கியமின்மையும், ஒரு காரணமாகும். இவ் ஐக்கியமின்மைக்கான அடிப்படைக் காரணங்களை அறிந்து கொள்ளல் மிக மிக அவசியமாகும். எமது சமூகத்தின் குட்டி முதலாளித்துவ சிந்தனைப் போக்கில் 'ஒரு இயக்கமே' இருக்க வேண்டும் என்ற குறுகிய சிந்தனையும், அதே வேளை இயக்கங்களுள் எழும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது உடைவுகள் ஏற்படும் போது அவை பின் பகை உணர்வில் ஆயுத முனையில் தீர்க்க முற்படுவதும், குட்டி முதலாளித்துவ தலைமைகளானதால் இயல்பாக ஏற்படும் குறுகிய பதவிப் போட்டி பூசல்கள் என்பனவும் சமூக அடிப்படையாக அமைந்தன. இவ்வகையாக எழுந்த இயக்க முரண்பாடுகளைத் தனது ஆதிக்க, நலன்களுக்காக இந்தியா ஊக்குவித்து வந்தது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். உதாரணமாக இயக்கங்களுக்கிடையில் சிண்டு முடிந்துவிடல், ஒன்றையொன்று அழிக்குமாறு ஆலோசனை கூறல், அழிக்கப்பட்டு பலயீனமான இயக்கத்துக்கு மீண்டும் ஆயுதம் வழங்கி வளர்த்தல், பொருளுதவி ஆயுத உதவி என்பவற்றில் 'பாரபட்சமாக வழங்கி இயக்கங்களுக்கிடையில் போட்டியையும், பொறாமையையும் ஏற்படுத்தல் போன்றவையாகும். இந்தியாவின் இவ்வாறான சதி வலைக்குள் இயக்கங்கள் விழுவதற்கு நாம் மேலே சொன்ன குட்டி முதலாளித்துவ வர்க்க அடிப்படையும், இந்தியா பற்றிய தவறான நம்பிக்கைகளும், அரசியல் தத்துவார்த்த தெளிவின்மையும், மிக முக்கியமான காரணங்களாக அமைந்தன என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால் போராட்டத்தின் ஒருகட்டத்தில் இயக்கங்களுக்கிடையே ஒரு ஐக்கிய முன்னணி அமைப்பு ( E.N.L.F. ) அமைக்கப்பட்டது. ஆயினும் அவ்வமைப்பானது இந்தியாவின் ஆலோசனையின் பெயரிலும் அதன் வற்புறுத்தலின் பெயரிலும் அமைக்கப்பட்ட ஒன்றாகும். அது அடிப்படையில் இந்தியா தனது மொத்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகோலக்கூடியதாக இருந்ததே அன்றி பொது எதிரிக்கெதிரான போராட்டத்தை நடத்துவதற்கு எந்த வகையிலும் துணை செய்யவில்லை. அவ் ஐக்கிய முன்னணியானது இயக்கங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஐக்கியம் என்ற எந்தவொரு அடிப்படையும் அற்ற ஒரு பம்மாத்து கூட்டுச் சேர்க்கை என்பதை இறுதியில் அவ் ஐக்கிய முன்னணிக்கு நேர்ந்த கதியில் இருந்து நாம் புரிந்து கொள்ளலாம்.

மேலும் இவ் இயக்கங்கள் தமிழ் பேசும் மக்களின் இன விடுதலையை இந்தியாவே பெற்றுத்தரும் என்ற கண்ணோட்டத்தைக் கொண்டிருந்ததாலும், போராட்டத்தின் பின் தளமாக இந்திய மண்ணை அதிகளவு பயன்படுத்தியதாலும், இப்போராட்டத்தை நீண்டகாலக் கண்ணோட்டத்தில் பார்க்காது பொருளாதார, இராணுவ அரசியல் ரீதியாக சுயசார்பில் தங்கி நிற்க வேண்டியதன் அவசியத்தை குறைத்துக் கொண்டார்கள். தமிழ் ஈழம், தேசிய விடுதலை என்ற கோஷங்களை இயக்கங்கள் முழங்கியபோதும் மக்கள் மத்தியில் சுயசார்பில் நின்று தேசத்தை மீட்பது பற்றிய புரிந்துணர்வை வளர்த்தெடுக்க முயலவில்லை.

விடுதலைப் புலிகளின் வளர்ச்சியும் அதன் நிலைப்பாடும்

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பம் முதல் இன்றுவரை ஒரு பிரதான சக்தியாக இருந்து வருகின்றது. ஆரம்பம் முதல் அதன் வளர்ச்சி எமது சமூக அமைப்பின் பல்வேறு பிற்போக்கம்சங்களைத் தாங்கி, குட்டி முதலாளித்துவ சிந்தனை முறையில் வளர்ந்ததாகும். தமிழ் ஈழ மக்களின் பிரதிநிதியாக 'ஒரு இயக்கமே' இருக்க வேண்டும் என்ற நிலைப்பாடும், சிங்கள மக்கள் மீதான இனவெறிப் போக்கும், தலைமை வழிபாடும், மந்திரத்தில் கட்டுண்டது போன்று செயற்படும் ஊழியர்களின் செயற்பாடும், தலைவரின் கட்டளையையும், ஸ்தாபன கட்டுப்பாடுகளையும் மீறுவோர் மீது கொடூரமான தண்டனை முறையும், அவ்வமைப்பினுள் மாற்று கருத்துக்களுக்கோ, அல்லது அக் கருத்துக்கள் பற்றிய விமர்சன சுய விமர்சனங்களுக்கோ அறவே இடமற்ற தன்மையும் விடுதலைப் புலிகள் அமைப்பின் விசேட தனித்தன்மையாகும்.

இவ்வாறான அம்சங்களே விடுதலைப் புலிகள் இயக்கமானது மிகக் கட்டுப்பாடான, வீரம் செறிந்த, புனிதத் தன்மை கொண்ட ஒரு இயக்கமாக மக்கள் மத்தியில் தோற்றம் பெற்றது. இதனாலேயே பெரும்பான்மை தமிழ் பேசும் மக்களை தம்பால் கவர்ந்தும் தான் செய்யும் அனைத்து செயற்பாடுகளையும் கண்மூடித் தனமாக ஏற்றுக் கொள்வதற்கு வழிவகுத்தது.

இதிலிருந்துகொண்டுதான் வி. புலிகள் ஏனைய இயக்கங்கள் மீது நடத்திய தாக்குதல்களையும், தடைவிதிப்புக்களையும், மக்கள் எவ்வாறு ஏற்றுக்கொண்டார்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பதை நாம் கணிப்பிட வேண்டும். போராட்டம் மிக நெருக்கடியான காலகட்டத்தை அடைந்து இலங்கை அரசின் தாக்குதல்கள் மிக உக்கிரமடைந்திருந்த காலகட்டத்திலேயே ஏனைய இயக்கங்கள் மீதான இத்தாக்குதல்கள் நடைபெற்றன. இத்தகைய தாக்குதல்கள் எமது போராட்டத்தைப் பலவீனப்படுத்தியே தீரும் என்கின்ற சாதாரண பகுத்தறிவு கூட இன்றி மக்கள் மத்தியில் இவை நியாயப்படுத்தப்பட்டன.

மக்கள் இவ்வகையான தாக்குதல்களை சுலபமாக ஏற்றுக்கொண்டமைக்கு ஏனைய இயக்கங்களின் கட்டுப்பாடற்ற தன்மையும், மோசமான செயற்பாடுகளும் பலமாகத் துணை செய்தன.

மேற்கூறிய காரணங்களால் எமது போராட்டம் பலவீனமாய் இருந்த சூழலை எதிரி சாதகமாகப் பயன்படுத்தினன். சிங்கள மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை படம்பிடிக்கப்பட்டுப் பயங்கரவாத நடவடிக்கையாக உலகிற்குச் சித்தரிக்கப்பட்டது. இதன் நோக்கம் தமிழ் பேசும் மக்கள் மீதான தனது கொலைகளை மறைப்பதும் தன்னை ஆயுத ரீதியாக வளர்ப்பதற்கு வெளிநாடுகளில் இருந்து கடன் பெறுவதுமாகவே இருந்தது. தொடர்ச்சியாக நடத்தப்பட்ட சிறுசிறு தாக்குதல்களைத் தொடர்ந்து இலங்கை அரசு ஆயுதங்களை வாங்கிக்குவித்தது. இராணுவத்தில் பல ஆயிரக்கணக்கானோர் சேர்க்கப்பட்டு வடக்குக் கிழக்கில் குவிக்கப்பட்டனர். இயக்கங்கள் இந்தியாவுடன் வைத்திருந்த உறவைக் காட்டி தனது நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசு நியாயம் கற்பித்தது.

நமது பலம் பலவீனத்தில் இருந்து இங்கு தாக்குதல்கள் நடத்தப்படவில்லை. இந்திய அரசின் ஆலோசனையின் பேரிலும், குறுகிய இராணுவக் கண்ணோட்டத்திலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் 'தமிழ் பேசும் மக்களின் பொருளாதார அடிப்படைகள் மோசமாக அழிக்கப்பட்டன, பல ஆயிரக்கணக்கானோர் அகதிகள் ஆக்கப்பட்டனர். அகதிகளை இந்திய அரசு தனது நாட்டிற்கு வருவதற்கு ஊக்குவித்ததன் மூலம் தான் தலையிடுவதற்கான நியாயங்களை உருவாக்கியது. சில இயக்கங்கள் இந்தியா செல்லுமாறு மக்களுக்கு ஆலோசனை வழங்கின. இது சர்வதேச ரீதியாக தமக்கு ஆதரவு பெருகுவதற்கு ஒரு பிரச்சாரமென இயக்கங்கள் கருதிக்கொண்டன. ஆனால், தமது சொந்த நாட்டில் தங்கிநின்று ஒடுக்குமுறைக்கெதிராகப் போராட வேண்டும் என்ற மனநிலையை மக்கள் இழந்தனர். மக்கள் தயார் அற்ற நிலையில் மக்கள் மீது இயக்கங்களாலும், இலங்கை அரசாலும் திணிக்கப்பட்ட யுத்தத்தால் மக்கள் சின்னாபின்னப்பட்டு பல நூற்றுக்கணக்கான கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டன. பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு ஓடினர்.

இச்சூழலில் இந்திய அரசு மத்தியஸ்தம் என்ற போர்வையில் தலையிட்டது. இதற்கு இயக்கங்கள் தாம் இலங்கை அரசுடன் பேசத் தயார் இல்லை, இந்தியாவையே நம்புகின்றோம், இந்தியா பொறுப்பு நிற்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். இந்தியா படிப்படியாகப் பேச்சுவார்த்தையில் தலையிட்டதன் மூலம் சர்வதேச ரீதியில் இலங்கைப் பிரச்சினையில் தான் மத்தியஸ்தனாகவும், முக்கியஸ்தனாகவும் காட்டிக் கொண்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்திய அரசு தந்திரமாக மத்தியஸ்தம் என்ற போர்வையில் இயங்கியதுடன் இயக்கங்களைப் பலவீனப்படுத்த முனைந்தது. இயக்கங்களுக்குள் இருந்த முரண்பாடுகளை வளர்த்து மோதல்களை உருவாக்கியது. இதனால் விரக்தியுற்ற இயக்கங்களில் இருந்த இளைஞர்கள் வெளியேறி வெளிநாடுகளுக்கு ஓடினர். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் ஒரு இயக்கக் கொள்கை இந்திய அரசிற்கு அரசியல் ரீதியில் மிகவும் சாதகமாகியது ஒன்று, ஒட்டுமொத்தமாக போராட்டம் பலவீனம் அடைந்தது. மற்றொன்று, LTTE ஏனைய இயக்கங்களைத் தடை செய்ய முன் ஓரளவிற்கு நாட்டிற்கு வந்து சொந்த மண்ணில் தங்கியிருந்து போராட முற்பட்டனர். இந்நிலைமைகள் இந்தியா தனது கையிலிருந்து போராட்டமும் இயக்கங்களும் நழுவி விழுமோ என்று அச்சப்பட வைத்தது. ஆனால், LTTE எடுத்த தடை நடவடிக்கை ஏனைய இயக்கங்கள் இந்தியாவின் முழு கைப்பொம்மைகள் ஆவதற்குப் பெரும் சாதகமாகியது. மேலும் மக்கள் போராட்டத்தில் பழைய உற்சாகத்தையும் இழந்தனர்.

மேலும் LTTE யிலுள்ள பலருக்கு தாம் செய்தது சரியா என்ற குற்ற உணர்வு உறுத்தாமல் இல்லை. இதை உணர்ந்து சிலர் வெளியேறவும் செய்தனர். ஆனால் தலைமைக்குக் கேள்விக்கு இடமின்றிக் கட்டுப்பட வேண்டும் என்ற நிலை பெரும்பான்மையினரை மௌனம் ஆக்கி இயந்திரமாகச் செயற்பட வைத்தது. இந்நிலைமைகளை இலங்கை அரசும் கவனிக்கத் தவறவில்லை. இயக்கங்களுக்கிடையில் நிகழ்ந்த யுத்தங்களின்போது நன்கு ஓய்வு எடுப்பதிலும் தன்னைப் பலப்படுத்துவதிலும் ஈடுபட்டிருந்த இலங்கை இராணுவம் ஒரு பெருந் தாக்குதலை தமிழ் பிரதேசத்தின் மேல் தொடுத்தது. இக்கட்டத்தில் LTTE இந்திய அரசிடம் வெடி மருந்துகளையும் துப்பாக்கிக் குண்டுகளையும் கெஞ்சாத குறையாகக் கேட்டது. ஆனால் இந்திய அரசு கொடுக்க மறுத்தது. இதனால் வடமராட்சிப் பகுதியை பெரும் சிரமங்கள் இன்றி இலங்கை இராணுவம் கைப்பற்றியது. இந்நிலையில் மக்கள் LTTE இல் வைத்திருந்த நம்பிக்கை தகர்ந்து விழுந்தது. மேலும் LTTE மற்றைய இயக்கங்களை அழித்ததால்தான் இந்த நிலை என்று தமக்குள் முணுமுணுத்தனர். யாழ் நகரை நோக்கி இலங்கை இராணுவம் எப்போது வருமோ என்ற மக்கள் அச்சப்பட்டனர். இது இந்தியாதான் எம்மைக் காப்பாற்ற வேண்டும் என்று மக்கள் எண்ணுமாறு LTTE யும், இந்திய அரசும் புதிய சூழலை உருவாக்கினர்.

இதற்கிடையில் LTTE ஆல் தாக்கப்பட்ட அமைப்புக்கள் தமது சொந்தப் பலத்தில் நிற்காமல் இந்தியாவின் கைப்பொம்மைகள் ஆனதைப் பார்ப்போம்.

LTTE ஆல் மற்ற இயக்கங்கள் அழிக்க முடிந்தமைக்கு மற்ற இயக்கங்களின் பலவீனமே காரணமாகும். ஒன்று LTTE யைப் போல் மற்ற இயக்கங்கள் தமது மக்கள் விரோத செயல்களைமறைக்கக் கூடிய அளவிற்குக் கட்டுப்பாடான இராணுவ அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. இதனால் மக்களின் வெறுப்பை ஏனைய இயக்கங்கள் சுலபமாகப் பெற்றன. LTTE யின் இராணுவ அமைப்பு ஹிட்லரின் பாசிச இராணுவ அமைப்பைப் போன்று தலைமைக்கு மந்திரத்திற்குக் கட்டுண்டது போல் எதையும் செய்யக்கூடிய, சிந்தனைச் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்ட எக்கட்டளையையும் நிறைவேற்றும் படு பிற்போக்கான இராணுவ அமைப்பாக இருந்தது.

புதிய சமுதாயம்

www.tamilarangam.net



ஆனால் ஏனைய இயக்கங்களின் இராணுவ அமைப்புகள் ஒரு முற்போக்கான ஜனநாயகத் தன்மை கொண்ட இராணுவமாகவோ அல்லது LTTE யைப்போல் பிற்போக்கான இராணுவ அமைப்பாகவோ அல்லாமல் வெறுமனே ஒழுங்கமைப் பற்றும் கட்டுப்பாடற்றும் வெறும் பயிற்சி பெற்ற இளைஞர்களின் கூட்டமாகவே இருந்தன. மேலும், LTTE யிடம் நிறைந்த ஆயுத பலமும், தொலைத்தொடர்பு வசதிகளும், பொருளாதார வலுவும் இருந்தன. ஏனைய இயக்கங்களிடம் இத்தகைய வசதிகளும் பலவீனமாகவே இருந்தன. அனைத்துக்கும் மேலாக LTTE தனது மக்கள் விரோத நடைமுறைகளை வெற்றிகரமாக மக்கள் மத்தியில் மறைத்ததன் மூலம் LTTE தன்னைப் பற்றிய நல்ல அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது. இதனால் மக்கள் மத்தியில் வலுவான எதிர்ப்பு ஏற்படவில்லை.

இந்நிலைமையில் ஏனைய இயக்கங்கள் இந்தியாவிற்கு ஓடின. அங்கு தவறுகளைச் சீர்தூக்கிப் பார்த்து ஒரு சரியான இராணுவ அமைப்பைச் சுய பலத்துடன் கட்டுவதற்குப் பதில் இந்தியாவின் காலடியில் வலுவாக விழுந்தனர். இந்தியாவும் விழுந்தவர்களுக்கு கைகொடுப்பதுபோல், இந்த இயக்க மோதல்கள் ஏற்பட்டு தம்மைப் பலவீனப்படுத்துவது தனக்குச் சாதகமானது எனக் கருதி, திரும்பவும் பயிற்சியும், வெடி மருந்துகளும் ஆயுதங்களும் இவ் இயக்கங்களுக்கு வழங்கியது.

இராணுவ பலத்தால் ஒரு இயக்கத்தை அழித்துவிடலாம் என இலங்கை அரசு நினைத்ததுபோல் LTTE யும் நினைத்தமைக்கு இது ஒரு சவாலாக அமைந்தது.

இந்நிலைமைகள் LTTE யினால் தடை செய்யப்பட்ட இயக்கங்களை கடந்தகால இலட்சியங்கள், கொள்கைகளை மறந்து LTTE யை அழிப்பதுதான் உடனடி வேலை என்ற நிலைக்குத் தள்ளிவிட்டது. இவ்வுணர்வுகளையும், முரண்பாடுகளையும் இந்தியா கையாண்டது. தடைசெய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஏற்பட்ட இராணுவ பொருளாதார பலவீனங்களைப் பயன்படுத்தி, தனது அரசியல் நோக்கங்களை உருவாக்க முயன்றது. இவ்வியக்க போராளிகளிடம் உள்ள அரசியல் பலவீனம், தெளிவின்மை, LTTE மீதான ஆத்திர உணர்ச்சி இவைகளால் இவர்கள் இந்தியாவின் கைப்பொம்மைகள் ஆயினர். இது எமது போராட்டத்தில் ஏற்பட்ட மிகப் பெரும் வீழ்ச்சியாகும்.

## இந்தியத் தலையீடும் வி. புலிகளின் நிலைப்பாடும்

இந்தியத் தலையீடு பற்றி நாம் பார்ப்பதற்கு முன்னர் விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு என்பது ஆரம்ப முதல் எவ்வாறு இருந்து வந்துள்ளது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்வது மிக அவசியமானதாகும். அப்போதுதான் இன்று விடுதலைப்புலிகளின் இந்திய எதிர்ப்பு நிலைப்பாடென்பது எத்தகையது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆரம்ப காலம் முதலே ஏனைய இயக்கங்களைப் போல் வி.புலிகளும் இந்தியாவில் இருந்துகொண்டுதான் இங்கு தமது செயற்பாடுகளை மேற்கொண்டனர். 1985இல் இந்தியா பூரணமாக அனைத்து இயக்கங்களையும் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்துவிடத் திட்டம் தீட்டி இயக்கங்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கத் தொடங்கியபோது விடுதலைப் புலிகளின் இன்றைய மூத்த தளபதிகள் என்று சொல்லப்படுவோர் அனைவரும் அங்கு பயிற்சி எடுத்தவர்கள்தான். அதனைத் தொடர்ந்து ஆயுதங்கள் வழங்கப்பட்டபோதும் ஏனைய இயக்கங்களைப் போன்று இவர்களுக்கும் ஆயுதங்கள் வழங்கப்பட்டன. இவர்களும் அதனைப் பெற்றுக்கொண்டவர்கள்தான். ஆனால் தொடர்ச்சியான பயிற்சிகள், ஆயுதங்கள் போன்றவற்றிற்காக ஏனைய இயக்கங்களைப்போல் முழுமையாக இந்தியாவை நம்பி இவர்கள் இருக்கவில்லை என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால் இவர்கள் இந்தியாவில் தங்கி நிற்காது இயங்கியமைக்கு எவருக்குமே அடிபணிந்து போகக்கூடாது என்ற போக்கும், புலிகள் இயக்கம், ஒரே தலைமை என்ற கருத்துப் போக்கும் தமிழ் ஈழம் ஒன்றுதான் தமிழ் மக்களுக்கான ஒரே தீர்வு என்ற விடாப்பிடியான தன்மை, போன்ற குறுந்தேசியவாத பாசிசக் கருத்தோட்டங்களே காரணமாக அமைந்தன. இதற்கு மேற்கத்தைய சக்திகளின் உள், பொருளாதார, ஆயுத உதவிகளும் துணையாய் இருந்தன, எனக் கருதுவதிலும் தவறில்லை. வி.புலிகளின் தனித்துவமான தன்மையால் இந்திய மத்திய அரசிற்கும் வி.புலிகளுக்குமிடையே தொடர்ந்து விரிசல்கள் இருந்து வந்தன. ஆனாலும், தமிழ் நாட்டு அரசுடன் இவர்கள் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தனர். இவ்வரசுடன் தனக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி ஏனைய இயக்கங்களின் நடவடிக்கைகளை இவர்கள் கட்டுப்படுத்தியும் உள்ளார்கள்.

ஆனால் இவர்களுக்கு மிகப் பெரும் பிரச்சினையாக இருந்த விடயம் என்னவெனில் மத்திய அரசாங்கம் தமக்குப் போட்டியாக 'ரெலோ' இயக்கத்தை வளர்த்து வந்ததேயாகும். வி.புலிகள் தமது கைக்குள் இருந்து நழுவிப் போவதை ஆரம்ப முதலே உணர்ந்த இந்திய அரசு தமக்கென ஒரு பொம்மை இயக்கமாக 'ரெலோ' இயக்கத்தை வளர்த்து, இங்கு எந்த இயக்கமுமே செய்யாத அளவிலான பாரிய தாக்குதல்களை வெற்றிகரமாக மேற்கொள்ளவும் செய்தது. அதுமட்டுமன்றி அதன் முக்கிய தலைவர்களை இங்கு அனுப்பி இங்கு அனைத்துப் பிரதேசத்திலும் தமது கட்டுப்பாட்டை நிலைநிறுத்தவும் முயன்றது.

இந்தக் கட்டத்தில்தான் வி.புலிகள் எமது போராட்டத்திற்கே பாதகமாக அமையக்கூடிய சில செய்கைகளில் இறங்கினர். ரெலோ இயக்கத்தின் மீது மிகக் கொடுமையான தாக்குதலை மேற்கொண்டு அதன் தலைவரையும் கொலை செய்தது. அந்த மோதலில் தமிழ் பேசும் மக்களின் நலன் என்பது ஒரு சிறுதுளியேனும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. மக்கள் மத்தியில் வெறுப்பைச் சம்பாதித்திருந்த 'ரெலோ' இயக்கத்தை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்த அதிக வாய்ப்பிருந்தும் குரூரமான முறையில் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களைச் சுட்டுப் பொசுக்கியதன் மூலம் விடுதலைப் புலிகள் தமது குறுகிய அரசியலின் புதிய சமுதாயம்

www.tamilarangam.net



வங்குரோத்துத்தனத்தை வெளிக்கொணர்ந்தனர். 'ரெலோ' இயக்கத்திலிருந்தே ஒரு பகுதியினரை வென்றெடுக்கும் பாணியில் இல்லாது வெறுமனே இயக்கத்தை அழித்தொழிப்பது எனும் தமது வெற்று அரசியலைக் கச்சிதமாக 'இந்திய ஏஜெண்டுகளை அழிப்பது' எனும் போர்வையில் மேடையேற்றினர். இங்கும், வி.புலிகள் 'ஒரே இயக்கக்' கொள்கைதான் கணக்கில் எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டத்தில்தான் வி.புலிகள் இந்தியாவைப் பற்றி எதிரான பிரசாரங்களை 'தமிழ் மக்கள்' என்னும் பெயரில் சுவரொட்டிகள் மூலமும், கூட்டங்கள் போட்டும் செய்யத் தலைப்பட்டனர். மக்களைப் பொறுத்தவரை வி.புலிகள் இந்தியாவை எதிர்ப்பது பிடிக்காத செயலாக இருந்தாலும், ரெலோ இயக்கத்தின் அடாவடித்தனமும், வி.புலிகளை எதிர்த்துப் பேசத் திராணியற்ற நிலையும் அவர்களை மௌனமாக அதனை ஏற்றுக்கொள்ள வைத்தது.

ரெலோவின் அழிவிற்குப் பின் தனக்குச் சாதகமாக செயற்படக்கூடிய இயக்கமாக EPRLF இற்கு அதிக உதவிகளை வழங்கி அதனை ஊக்குவிக்க இந்தியா முயன்றது. தொடர்ச்சியாக 'அராஜக எதிர்ப்பு' அரசியலை முன்கொண்டு வருவதாகச் செயற்பட்ட EPRLF இந்திய உதவியின் பின்னணியில் வெளிப்படையாக வி.புலிகளை முகம் கொடுக்கும் பாணியில் தமது வேலைகளை முடுக்கிவிட்டனர். அதன் காரணமாக இங்கு விடுதலைப் புலிகளுக்கும் EPRLF இற்கும் நடைமுறையில் பல முரண்பாடுகள் தோன்றின. அம்முரண்பாடுகள் முற்றிய கட்டத்தில் வி.புலிகள் முந்திக்கொண்டனர். EPRLF இற்கு எதிராக பாரிய தாக்குதலைத் தொடுத்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவர்களை மிகவும் பலவீனப்படுத்தினர். இதிலிருந்து வி.புலிகள் இந்திய அரசிடம் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகள் என்பதனை நிரூபிக்க முயன்றது. ஆனால் வி.புலிகளின் இந்தத் தாக்குதல்களுக்குப் பின்னுள்ள பலவீனமான நிலைமைகளை இந்திய இலங்கை அரசுகள் எவ்வாறு பயன்படுத்திக் கொண்டன என்பதை முன்னரே பார்த்தோம்.

இந்திய அரசு இராணுவ ரீதியாக இங்கு தலையிடுவதற்கு இலங்கை அரசாங்கத்தின் கபடத்தனமான செய்கைகளும், அதன் இந்தியாவுடன் முரண்பட்டுக் கொண்ட தன்மைகளும் எவ்வாறு காரணமாக அமைந்தனவோ அதேபோன்று வி.புலிகளின் தந்திரோபாயம் அற்ற தாக்குதல் நடவடிக்கைகளும் அதன் குறுகிய நிலைப்பாடுகளும் காரணமாக அமைந்துள்ளன என்பதை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

இந்திய அரசு உணவுப் பொட்டலங்களைப் போட்டபோது வி.புலிகளும், அதன் தலைவர், தளபதிகள் மற்றும் ஆலோசகர்கள் அனைவருமே தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதற்க பகிரங்க அறிக்கைகள் விட்டனர். வானத்தில் இருந்து போடப்பட்ட உணவுப் பொட்டலங்களைக் கூட தமது காரியாலயங்களுக்கு எடுத்துச் சென்று தாமே முன்நின்று விநியோகிக்கவும் செய்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடுத்து பூரி, குப்தா போன்றோர் விஜயம் செய்தபோது பெருந்தொகையான மக்களைத் திரட்டிச் சென்று அவர்களுக்கு மாலை அணிவித்து அவர்களிடம் மக்கள் என்னும் போர்வையில் மகஜர்கள் கையளிக்கச் செய்தனர். அந்தமகஜரில் இருந்ததெல்லாம் வேறொன்றுமில்லை, தமிழ் மக்களின் தலைவராக பிரபாகரனை அங்கீகரியுங்கள், தமிழ் மக்களின் ஒரே அமைப்பாக வி.புலிகளை அங்கீகரியுங்கள் என்பதுதான். அவர்கள் நடத்திய ஊர்வலங்கள் கூட, தமிழீழத் தலைவன் பிரபாகரனை அங்கீகரி. புரட்சி மன்னன் எம்.ஜீ.ஆர். வாழ்க, மதுரையை மீட்ட சுந்தர பாண்டியனே தமிழீழத்தை மீட்டுத்தா என இந்தியாவை நம்பி அதனிடம் கெஞ்சுவது போலக் கோஷம் போட்டார்களே ஒழிய தமிழ் பேசும் மக்களின் சுதந்திரம், நலன் என்பவற்றில் அக்கறை வைத்து எதுவும் செய்யப்படவில்லை. அவர்களின் ஒரே நோக்கமாக இருந்தது எப்படியாவது நாம் மட்டும்தான் இங்கு அதிகாரத்தில் வரக்கூடிய சக்தி என்பதை இந்தியாவிற்கு நிரூபிப்பதேயாகும்.

இந்திய அரசின் அடுத்த கட்ட நடவடிக்கை எப்படி இருக்குமோ என எல்லோரும் சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில்தான் தலைவர் பிரபாகரன், பூரி, குப்தா போன்றோருடன் பேச்சுவார்த்தை நடத்தி புகைப்படங்களும் பிடித்து பத்திரிகைகளில் போட்டு பெருமைப்பட்டார்கள். யாரும் எதிர்பாராத விதத்தில் திடீரென ஒருநாள் இந்திய விசேட விமானமூலம் தலைவர் பிரபாகரன் இந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அப்போதும் வி.புலிகள் என்ன சொன்னார்கள், இந்தியா எமது தலைவரை ஏற்றுக்கொண்டுவிட்டது. பி.எல்.ஓ தலைவரைப் போல் எமது தலைவரும் ஆயுதபாணியாகவே அழைத்துச் செல்லப்படுகின்றார் என பத்திரிகைகளில் செய்திகளைப் போட்டார்கள். தமிழ் மக்களும் அப்பாடா கிடைத்துவிட்டது சுதந்திரம் என எண்ணியிருந்தனர்.

மீண்டும் அடுத்த கட்டம் மிக விநோதமாய் இருந்தது. இந்திய அரசு எமது தலைவரை டெல்லியில் சிறைவைத்துவிட்டது எனக் கூறி மக்களே வாருங்கள் மக்கள் போராட்டம் செய்ய என வீதிமறிப்பு போராட்டங்களில் இறங்கினார்கள். ஆனால், அதேவேளை இந்திய அரசோ கொழும்பில் ஜே.ஆர் உடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து இரவோடிரவாக வடக்கு, கிழக்குப் பகுதிகளின் கேந்திர ஸ்தானங்களில் தனது இராணுவத்தையும் கொணர்ந்து குவித்தது.

அந்தக் கட்டத்தில் இராணுவ முகாம்களை விட்டு வெளியே வராமல் வீதிமறிப்புப் போராட்டம் செய்து, இவர்கள் வைத்த பிரதான கோஷம் எமது தலைவரை உடனே விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே. மத்திய அரசின் கட்டளைப்படி முதலமைச்சர் எம்.ஜீ.ஆர் அவர்கள் பிரபாகரனைச் சந்தித்தார். இரகசியமாகப் பேச்சுக்கள் நடத்தினர். என்ன பேசினர் என்பது யாருக்கும் தெரியாது. அதனைத் தொடர்ந்து தலைவர் பிரபாகரன் இங்கொண்டுவந்து விடப்பட்டார். மறுநாளே வீதிமறிப்புப் போராட்டங்கள் நின்றுவிட்டன. முகாமுக்குள் இருந்த இராணுவ அதிகாரிகளை வி.புலிகளே முன்னின்று நகருக்குள் அழைத்துவந்தனர். எமது மண்ணை அவர்களுக்குச் சுற்றிக் காட்டினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடுத்த கட்டமான ஆயுத ஒப்படைப்பு வந்தது. ஏனைய இயக்கங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கும்வரை நாம் ஒப்படைப்பதில்லை என வி.புலிகள் அறிவித்தனர். பின்னர் பல இரகசியப் பேச்சுக்கள் இந்திய அதிகாரிகளுடன் நடைபெற்றன. ஏதோ வாக்குறுதிகள் கிடைத்துவிட்டதாக கூறி சுதுமலையில் மாபெரும் கூட்டம் கூடி வரலாற்றுப் புகழ் மிக்க உரையுடன் தாம் இந்தியாவை நம்புவதாகவும், இனி தமிழ்மக்களைக் காப்பது அவர்களின் பொறுப்பு என்றும் கூறினர். அதேவேளை தலைவர் பிரபாகரன் தான் தேர்தலில் நிற்கப் போவதில்லை என்றும், தனது கட்சி நிற்கும் என்றும், தான் பதவிக்கு ஆசைப்படவில்லை என்றும் அறிவித்தார். அதனைத் தொடர்ந்து ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இடைக்கால நிர்வாக அமைப்பில் தமது பிரதிநிதிகளின் பெயர்ப் பட்டியலை முன்வைத்தார்கள். ஆனால் கிழக்கு மாகாணத்தைப் பற்றி இவர்கள் கவனக் குறைவாகவோ, அக்கறையற்றோ இருந்துவிட்டார்கள். இதனைப் பயன்படுத்த நினைத்த இலங்கை அரசு தனக்குச் சாதகமான பிரதிநிதிகளை அங்கு போட முனைந்ததும், வி.புலிகள் விழுந்தடித்து ஓடிவந்து சிவஞானத்தைப் பட்டியலில் இருந்து இராஜினாமா செய்வித்து கிழக்கில் பத்மநாதன் எமக்கு வேண்டும் என்று கூப்பாடு போட்டனர்.

அதுமட்டுமன்றி இடைக்கால நிர்வாகத்தில் தமக்கு வழங்கப்பட்ட 5 பிரதி-நிதித்துவம் போதாது என்று கூறி 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்து திலீபனை சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் இறக்கினர். திலீபன் இறந்ததும், இந்திய அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடந்தன. இடைக்கால நிர்வாகத்தில் EPRLF இன் பிரதிநிதித்துவம் இல்லாது செய்யப்பட்டதும் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது. ஏதோ வாக்குறுதிகள் கிடைத்துவிட்டதாகக் கூறி 5 அம்சக் கோரிக்கையும் கைவிடப்பட்டது.

இதேவேளை இந்தியா இவர்களை அம்பலப்படுத்துவதற்காகவும் இவர்கள் ஆயுதக் கையளிப்பில் மோசடி செய்துள்ளார்கள் என்பதை வெளிக்கொணரவும் ஏனைய இயக்கங்களிடம் ஆயுதங்களைக் கொடுத்து இவர்களைத் தாக்கச் செய்தார்கள். இந்தியா விரித்த வலையில் இவர்கள் மிக முட்டாள்தனமாக வீழ்ந்தார்கள். எம்மை தாக்கினால் பதிலடி கொடுப்போம் எனக் கூறிக்கொண்டு ஏனைய இயக்கங்களில் இருந்தவர்கள் என, தாம் சந்தேகித்தவர்களையெல்லாம் சுட்டு தம்மிடம் ஆயுதம் இருப்பதை நிரூபித்தார்கள்.

இதேவேளை புலேந்திரன், குமரப்பா தலைமையிலான குழுவொன்றை ஆயுதங்களுடன், துரதிர்ஷ்டவசமாக சிங்கள அரசால் பிடிக்கப்பட்டதும் மீண்டும் மக்களைக் கூவி அழைத்து வீதிமறிப்பும், மறியல் போராட்டமும் செய்து தமது உறுப்பினர்களை இலங்கை இராணுவம் விடுவிக்க இந்தியா முயல வேண்டும் எனக் கோஷமிட்டார்கள்.

புதிய சமுதாயம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால் இந்திய இராணுவத்தையும் மீறி இலங்கை அரசு அவர்களைக் கொழும்பு கொண்டு செல்ல முயன்றதும், அவர்களை வலுக்கட்டாயமாக சயனைட் அருந்தி தற்கொலை செய்ய வைத்து அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி தாம் பிடித்து வைத்திருந்த சிங்கள சிப்பாய்களையும், அரசாங்க ஊழியர்களையும் மிருகத்தனமாக சுட்டு வீதிகளில் வீசினார்கள். கேட்டதற்கு அது மக்கள் எழுச்சி கொண்டு ஆத்திரத்தில் செய்தார்கள் என மக்கள் தலையில் கட்டினார்கள்.

மேற்கூறிய சம்பவம் மிகவும் முக்கியமான திருப்பு முனையாக பலராலும் கருதப்படுவதுடன், அதனை மையப்படுத்தி பல வியாக்கியானங்களும் வெளிவருகின்றன. அவ்வியாக்கியானங்களை ஆராயும்போது நாம் வி.புலிகளின் அரசியல் அணுகுமுறையின் உள்ளார்ந்த அர்த்தத்தைப் புரிந்து கொள்ளலாம். மேற்கூறியது ஒரு முக்கியமான சம்பவம் என்பதை மறுக்க முடியாது. 'எனினும், அச்சம்பவம் நடைபெறாமல் விட்டிருந்தால், இந்திய இலங்கை ஒப்பந்தம் எதுவித தடைகளுமின்றி தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து முன்னேறியிருக்குமாம். இவ்வாறு ஒருகருத்து பரவலாக முன்வைக்கப்படுகின்றது. இது சரியானதா? அது மட்டுமின்றி தமிழ் மக்களின் நலனில் அடிப்படையில் உதவவந்த இந்திய அரசை இலங்கை அரசு இந்த சம்பவத்தின் மூலம் தன் சதி வலைக்குள் வீழ்த்திவிட்ட நிகழ்வு என்றும் ஒரு கருத்து வைக்கப்படுகின்றது. இது சரியானதா?

இந்திய அரசின் நலன்கள், அதன் பின்னணியில் இந்தியாவின் செயற்பாடுகள் வி.புலிகளின் குறுகிய கால அரசியல் பார்வை, அரசியல் செயற்பாடு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட நிகழ்வாகவே அதனை நாம் பார்க்க வேண்டும். அதுமட்டுமின்றி ஸ்ரீ லங்கா அரசிற்கும், ஏனைய போராட்டக் குழுக்களுக்கும் இடையேயான வரலாற்று வரையறைகளின் அடிப்படையிலான உள் முரண்பாடுகளின் வெளிப்பாடாகவுமே இந்நிகழ்வை நாம் பார்க்க வேண்டும்.

இலங்கை இந்திய ஒப்பந்தமானது எமது இன முரண்பாடுகளைத் தீர்க்கும் திசையிலான வளர்ச்சிப் போக்கில், ஆரோக்கியமான அரசியலைக் கொண்ட உட்சக்திகளின் வளர்ச்சியால் ஏற்பட்ட போராட்டத்தின் உச்சக் கட்டத்தில் உருவானதொன்றல்ல. மாறாக இன முரண்பாடுகளின் வெளிப்பாடுகளாக அவற்றில் தங்கிவளர்ந்த அரசியல் சக்திகளின் அரசியல் வங்குரோத்துத் தனத்தின் உச்சக் கட்டத்தைப் பாவித்து, இந்திய அரசானது தனது பிராந்திய ஆதிக்க நலனை பிரதானமாகக் கொண்டு தனது செயற்பாடுகளை வரையறுத்து வலுவில் திணிக்கப்பட்டதொன்றேயாகும்.

அன்றைய கட்டத்தில் அதன் அந்த நிலைப்பாடென்பது தவிர்க்க முடியாத தொன்றாகத் தமிழ் மக்கள் தொடக்கம் பல்வேறு சர்வதேச சக்திகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் மாற்று வழியின்றிய காரியமாகவே கணிக்கப்பட்டதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



18 வி.புலிகளையும் ஆயுதத்துடன் இலங்கை அரசு கைது செய்ததை தமிழ் மக்கள் கடந்த கால வரலாற்றைக் கணக்கிலெடுத்தே கணிக்க வேண்டும். ஸ்ரீலங்கா அரசின் பெருமினவாத ஒடுக்கு முறையே இன்றைய நிலைமைக்குப் பிரதான காரணமாக இருந்தது என்பதனை நாம் மறுத்தல் இயலாது. அந்தப் பின்னணியில் இரு பாராருக்கும் இடையே (இலங்கை அரசிற்கும், தமிழ் மக்களுக்கும்) பரஸ்பர நம்பிக்கை உருவாக்கப்பட வேண்டுமாயின் பழிவாங்கும் அணுகுமுறை தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆகவே இலங்கை அரசு 18 வி.புலிகளைக் கைது செய்ததைக் கண்டிக்கவும், தமது எதிர்ப்பைத் தெரிவிக்கவும் பரந்துபட்ட ரீதியில் அனைத்து மக்களும் அரசிற்கு எதிராக தமது எதிர்ப்பைக் காண்பிப்பதில் தவறில்லை. அதற்கு மாறாக இந்திய அரசு ஸ்ரீலங்கா அரசைக் கட்டுப்படுத்தி வி.புலிகளை விடுவித்துத் தர வேண்டும், என்பது சிங்கள மக்களின் சுயாதிபத்தியத்தை நாம் மறுக்கும் செயலாகும். அத்துடன் இந்திய மேலாதிக்கத்தை சிங்கள மக்கள் மீது திணிப்பதற்கான ஐந்தாம் படையாக நாம் செயற்படுவதற்கு ஒப்பாகும்.

அதுமட்டுமின்றி 18 வி.புலிகளுக்கும் சயனைட் சிறையினுள் கொடுக்கப்பட்டது, அப்பாவிச் சிங்கள பொதுமக்களும், கைது செய்யப்பட்டு மாதக் கணக்கில் பாதுகாப்பில் வைத்திருந்த போர்க் கைதிகளைக் கொன்று தெருவில் வீசியெறிந்ததும் எமது வீரத்தைக் காட்டி நிற்கவில்லை. மாறாக எமது குரூரமான அழிவு அரசியலை துலாம்பரமாக வெளிக் கொணர்ந்தது. அநுராதபுரம் படுகொலை எவ்வாறு எமது போராட்டத்தில் ஒரு கறைபடிந்த நிகழ்வாக அமைந்ததோ அந்நிகழ்வு பலரால் முற்போக்கு மூலாம் பூசப்பட்டபோதும் எமது அரசியலின் உண்மையான சொரூபத்தை தோலுரித்துக் காட்டியதோ, அதேபோன்று மேற்கூறிய நிகழ்வும் இந்தியாவின் ஆதிக்கத்தைப் பயன்படுத்தி வேறொரு இனத்தின் இறைமையை அபகரிக்க முயன்ற எமது 'சிறுபிள்ளை அரசியலை' அம்மணமாய் காட்டி நின்றது.

அது மட்டுமின்றி பாட்டாளி வர்க்க அமைப்பைக் கட்டப்போவதாய்ச் சொல்லிக் கொண்ட இயக்கங்கள்கூட இந்தியாவின் கையாலாகாத் தனமே இது எனப் பிரஸ்தாபித்தது மிக வேடிக்கைக்குரியது. அவர்கள் அவர்களை அறியாமலேயே முழுத் தேசமும் இந்திய ஆதிக்கத்திற்கு உட்பட்டுப் போகும் நிலையை ஊக்குவிக்கிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இப்படியாக இவர்கள் செய்த செயல்கள் எல்லைமீறிப் போகவே இதையே சாட்டாக வைத்துப் பிரபாகரனைக் கைது செய்ய இந்திய அரசு திட்டம் தீட்டிய வேளையில் இவர்களும் இந்திய இராணுவத்தினர் மீது ஆரம்பத் தாக்குதலைத் தொடுத்தார்கள். அத்துடன் ஆரம்பித்ததுதான் இந்தியா-புலிகள் யுத்தம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்சொன்ன விடயங்களை நாம் ஆழமாகப் பார்த்தோமானால் எமக்கு ஒரு விடயம் தெளிவாகப் புரிந்திருக்கும். அதாவது இந்திய அரசு, வி.புலிகளுக்கு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி என்னும் அங்கீகாரத்தை வழங்கியிருந்தால் இன்று அவர்கள் இந்தியாவின் செல்லப் பிள்ளையாக இருந்திருக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருந்தன. ஆனால் இவர்களை முழுமையாக நம்பாத இந்தியா ஏனைய சக்திகளையும் அந்த நிர்வாக அமைப்பினுள் நுழைக்க முயன்றது.

இவர்களின் தேசப் பற்றும், மக்கள் மீதான நேசத்தையும் புரிந்து கொள்ள இவர்கள் இந்தியாவுடன் நடத்திய யுத்த முறையை சற்று ஆழமாகப் பார்த்தாலே புரியும். இந்திய இராணுவத்துடன் மோதி வெற்றி பெறுவதிலோ அல்லது இந்திய இராணுவத்தை அழிப்பதிலோ இருந்த கவனத்தை விட இந்திய இராணுவத்தைக் கொண்டு எவ்வளவு அதிகமான மக்களைக் கொல்ல முடியுமோ கொன்று அதனை உலகிற்கு எடுத்துக் காட்டி இந்தியாவை அம்பலப்படுத்தவே விரும்பினர். மக்கள் செறிவாக குடியிருந்த முகாம்கள், கோயில்கள், வைத்திய சாலைகள் போன்றவற்றை தமது கவசமாக்கி இராணுவத்தைத் தாக்கியதால் இராணுவத்தைக் கொண்டு அவ்விடங்களைத் தாக்கப் பண்ணி இந்தியாவை அம்பலப்படுத்த முயன்றார்கள். புலிகளின் தலைவரும், அவரின் ஆலோசனைக் குழுவும் ஓடி ஓடி ஒழித்துக்கொண்டு, ஒன்றும் அறியா அப்பாவி இளைஞர்களை முன்றால் நிறுத்தி வீணாகக் கொன்றார்கள்.

இறுதியாக தேசப்பற்று நிறைந்தவர்கள் என்று கூறும் இவர்கள் செய்த மிகக் கேவலத்தனமான காரியம் என்ன? ஆரம்பத்தில் தமது அழிப்பு நடவடிக்கை மூலம் அந்நிய நாட்டானை எமது நாட்டினுள் மிக விரைவில் வர வழிவகுத்தார்கள். பின்பு இந்தத் தந்திரோபாயமற்ற யுத்தத்தால் நாட்டுக்குள் வந்த அந்நியனை நடு வீட்டுக்குள் கொண்டுவந்து நிறுத்தியுள்ளனர். இவையெல்லாம் எதற்காக? தமது அதிகார வெறிக்குத் தீனி போடுவதற்காக மட்டுமே அன்றி வேறொன்றுமல்ல.

இன்றும் கூட இந்தியா இவர்களின் கையில் முழு அதிகாரத்தையும் கொடுக்க முன்வந்தால், இவர்களின் இந்திய எதிர்ப்பு எவ்வாறு இருக்கும் என்பது கேள்விக் குறியே.

எனவே இன்று புலிகள் இந்திய அரசுடன் மோதும் ஒரு நடவடிக்கையை மட்டும் மொட்டையாகப் பார்த்து அவர்களை ஒரு தேசப்பற்று மிக்க முற்போக்கு சக்தியாக பார்ப்போமானால் அது மிகத் தவறானதாகும். இன்று இவர்களின் யுத்தத்தை மட்டுமே வைத்து அவர்களின் கடந்தகால மக்கள் விரோத செயற்பாடுகள் அனைத்தையும் முலாம் பூசி மறைப்பதென்பதும், முடியாத காரியமாகும். இருப்பினும் இந்திய இராணுவத்திற்கெதிரான வி.புலிகளின் விட்டுக் கொடுக்காத யுத்தம் என்பது கோட்பாட்டு ரீதியில் ஆதரிக்கப்பட வேண்டியதும், அவசியமானதும் ஆகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்று இந்திய அரசின் ஆதரவில் நின்றுகொண்டு அரசியல் செய்ய முனையும் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ போன்ற அமைப்புக்கள் இந்தியாவின் கைப்பொம்மைகளாகிப் போன நிலைமை எவ்வாறு உருவானது என்பதை நாம் விரிவாக ஆராய வேண்டும்.

இவ் இயக்கங்கள் எல்லாமே ஏனையவற்றைப் போன்று ஒரு விதத்தில் கடந்தகால அரசியல் வளர்ச்சிப் போக்கின் வெளிப்பாடுகளேயாகும். தமிழ் பேசும் மக்களுக்கும் இலங்கை அரசிற்கும் இடையே முரண்பாடுகள் கூர்மை அடைந்த வேளையில் உருவகம் பெற்ற இவ்வமைப்புக்கள் எல்லாம், கடந்தகால தமிழ்த் தலைமையின் (த.வி.கூ) அரசியல் அடிப்படையான குறுந்தேசியவாத அடிப்படையையே தமக்கும் கொண்டிருந்தன. எனவே இவை கடந்தகால தமிழ்த் தலைமை அரசியலுக்கு மாறான ஒரு போக்கின் வளர்ச்சிக்கட்டமாக அதனை முறியடித்து மேலாதிக்கத்திற்கு வந்தவை அல்ல. தமிழ்த் தலைமையின் வங்குரோத்துத் தனத்தின் வெளிப்பாடாக அதன் தொடர்ச்சியாக உருவானதாக இருப்பினும், அத்தமிழ் தலைமையை எதிர்மறுக்கும் தன்மையின் கூறுகளும் காணப்பட்டதை நாம் கூறவேண்டும். (த.வி.கூ. காட்டிக் கொடுப்புகள், ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாடு, குறுந்தேசிய இனவாத நிலைப்பாடு). ஆனாலும் ஓர் குறிப்பிட்ட காலம் வரை இவ்வியக்கங்களின் பிரதான போக்குகள் என்பவை தெளிவாக நிர்ணயிக்கப்படாமலேயே இருந்தது. இவ் எதிர்மறுக்கும் இயல்பு இவ்வியக்கங்களுள் உருவானமைக்கு, கடந்தகால இடதுசாரி இயக்கங்களில் இருந்து பிரிந்து உதிரிகளாய் வந்தவர்கள். இவ் அமைப்புக்களின் பல மட்டங்களில் இருந்தமை காரணம் ஆகும்.

கடந்தகால இடதுசாரி அமைப்புக்கள் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையில் அதிக சிரத்தை எடுக்காத தன்மையும் வெறும் பாராளுமன்ற வாதத்திலும், தொழிற்சங்க வாதத்திலும் மூழ்கி இருந்தமையால், சமூக ரீதியில் இனங்களுக்கு இடையே ஐக்கியத்தையோ, சமூக மாற்றத்தையோ ஏற்படுத்த முடியவில்லை. இந்நிலைமையிலும் விரக்தியுற்று வெளியேறிய நபர்கள் தமிழ்த் தேசிய இயக்கங்களுக்குள் தம்மை நுழைத்துக்கொண்டனர். ஆனாலும் இவர்களால் காலத்தின் ஓட்டத்திற்கேற்ப ஓடிய அவ் இயக்கங்களின் தவறான சிந்தனை ஓட்டத்தில் இருந்து அவற்றைத் தடுக்க முடியவில்லை. மாறாக அவ்வியக்கங்களுள் வேரூன்றியிருந்த குறுந் தேசியவாத கருத்துப்போக்கு வலுவாக இவர்களையும் அத்திசையில் இழுத்துச் சென்றது.

மேற்சொன்ன காரணம் மட்டுமின்றி இவ்வியக்கங்கள் தத்தமக்குள்ளே கொண்டிருந்த அராஜக நடைமுறைகளும், ஜனநாயகத்தை மறுக்கும் போக்குகளும், அவற்றின் தலைமைக்கு சரியான அரசியல் அடிப்படையும் தெளிவும் இல்லாமையும், சரியான மக்கள் அடிப்படை இல்லாமையும் கூட இவ்வியக்கங்கள் இறுதிக் கட்டத்தில் சின்னாபின்னப்பட்டுச் சிதறிப் போனமைக்கான காரணங்களாகும்.
(தொடர்ச்சி முன் அட்டையின் பின்புறத்தில்......)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(16ஆம் பக்கத் தொடர்ச்சி....)

எனவே வி.புலிகளின் இயக்கங்கள் மீதான தாக்குதல்கள் மட்டுமே, இன்று இவர்கள் இந்தியாவின் கைப் பொம்மைகளாகிப் போனதற்குக் காரணம் என நாம் கொள்ளலாகாது. அப்படிக் கணிப்பிடுவோமாயின் இன்று இவர்கள் புரியும் அனைத்து மக்கள் விரோத செயற்பாடுகளையும் கண்மூடித்தனமாக நியாயப்படுத்திய பாரிய தவறினை இழைத்தவர்களாவோம். ஆகவே இன்று இவர்கள் நடத்தும் அரசியலானது முழுத் தேசமுமே இந்தியாவின் ஆதிக்கத்திற்குள் சிக்குண்டு போவதற்கும், இத்தேச மக்கள் அனைவரும் தமது சுயாதிபத்தியத்தை இழந்து போவதற்கு வழிவகுக்கும் துரோகத்தனமானதாகும்.

இன்று எமது மத்தியில் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் அமைப்புக்கள் எவையும் அடிப்படையில் மக்கள் நலனில் இருந்து செயற்படவில்லை என்பதையும், இவர்களால் இத்தேசத்தில் ஓர் சமூக மாற்றத்தைக் கொண்டுவர முடியாது என்பதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். இன்று இங்கு ஒரு பாரிய வெற்றிடம் காணப்படுகின்றது. இவ்வெற்றிடமானது நிரப்பப்படவேண்டுமாயின், அது இன்றைய காலகட்டத்தின் சிக்கலான நிலைமைகளைச் சரிவரப் புரிந்து, மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் ஒரு பரந்துபட்ட அமைப்பினூடாகவே முடியும். அவ்வமைப்பானது அவ்வாறு அது தன்னைப் பலப்படுத்திக் கொண்டாலேயே இன்று எம்மகத்தே உள்ள சக்திகளுடனான பலம், பலவீனப் போட்டியில் தன்னைத் தற்காத்துக் கொள்ள முடியும். அத்துடன் இன்று மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள இவ்வராஜகச் சூழலில் இருந்து விடுபட வழிசமைக்கவும் முடியும்.

இவ்வாறானதொரு அமைப்பு இன்று இல்லாததன் காரணத்தினால் இன்று இந்தியாவிற்கு எதிராக போராடுபவையோ, அல்லது இந்தியாவுடன் சேர்ந்து நிற்பவையோ, மக்கள் நலன் சார்ந்த அமைப்புகளாகக் கருதப்பட்டுவிட முடியாது. இவ்வியக்கங்களுக்கிடையே உள்ள முரண்பாடுகளையும், அம்முரண்பாடுகளால் ஏற்படக்கூடிய அனைத்து சாதக பாதக அம்சங்களையும் கணக்கிலெடுத்து, அவற்றைப் பொது எதிரிக்கெதிரான செயற்பாட்டை நோக்கி மையப்படுத்தும் வேலையில் - மேற்சொன்ன மக்கள் நலன் சார்ந்த அமைப்பானது சரியான ஐக்கிய முன்னணி, யுத்த, நடைமுறைத் தந்திரங்களை வகுத்துச் செயற்பட வேண்டும். அப்போதுதான் இம்மொத்தப் போராட்டத்தையும் வெற்றிக்கு இட்டுச் சென்று ஓர் சமூக மாற்றத்திற்கான அடிப்படையை இங்கு உருவாக்க முடியும்.

இப்பத்திரிகை, பல்வேறு ஜனநாயக மறுப்பு இயக்கங்களின் மத்தியில் வெளிவருகின்றது. இப்பத்திரிகையில் வெளிவரும் கருத்துக்கள் சரியா, தவறா என்பது ஒருபுறமிருக்க, இக்கருத்துக்களைச் சொல்வதற்கு சுதந்திரம் இங்கு இல்லை. பல்வேறு அச்சங்கள் மத்தியில் ஒரு கோழைத்தனமான சமூகமாக எமது சமூகம் உருவாக்கப்பட்டு வருகிறது.

இதை உடைத்தெறிந்து புதிய சமுதாயம் உருவாக்க தனது பங்களிப்பை இப்பத்திரிகை செய்யும். தாங்களும் இப்பத்திரிகையைப் பலரும் படிப்பதற்குக் கொடுத்து உதவவும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்